# රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව
# ප්‍රගති වාර්තාව

## அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
## முன்னேற்ற அறிக்கை

# Public Service Commission
# Progress Report

# 2018.04.01 – 2018.06.30

**உள்ளடக்கம்**


| தொடர் இல | விடயம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01 | அறிமுகம் | 01 |
| 02 | ஆணைக்குழு கூட்டங்கள் | 01 |
| 03 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பிரிவுகளினது செயற்பாடுகள் | 01 |
| | • தாபனப் பிரிவு | 01 |
| | • நியமனப் பிரிவு | 04 |
| | • பதவி உயர்வுப் பிரிவு | 06 |
| | • ஒழுக்காற்றுப் பிரிவு | 08 |
| | • மேன்முறையீட்டுப் பிரிவு | 12 |
| 04 | கல்விச் சேவைக்குழு | 15 |
| 05 | சுகாதார சேவைக்குழு | 17 |
| 06 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 20 |
| 07 | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடனான கூட்டங்கள் | 21 |
| 08 | பொதுமனுக்குழுவில் ஆஜராகுதல் | 22 |

## 01. அறிமுகம்

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட 54(1) உறுப்புரையின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கு அமைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட புதிய அரசாங்க சேவை ஆணைக்குழு 2015.10.15 ஆம் திகதி முதல் தனது பணிகளை ஆரம்பித்தது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அரசியலமைப்பின் 55(5) ஆம் உறுப்புரைக்கு அமைய ஒவ்வொரு வருடமும் பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுகின்றது. மேலும் அரசியலமைப்புப் பேரவையின் அறிவுரைக்கு அமைய ஒவ்வொரு காலாண்டுக்கும் முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அவ்வாறு ஒவ்வொரு தவணைக்குமான முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்கும் படி 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிவிக்கப்பட்டதற்கு அமைய 2016.01.01 ஆம் திகதியிலிருந்து 2018.03.31 ஆம் திகதி வரையிலான காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

பாராளுமன்றத்திற்கு காலாண்டு அடிப்படையில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவேண்டியிருப்பினும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதன் முன்னேற்றம் மாதாந்தம் பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த அறிக்கைகள் மேற்பார்வை செய்யப்படுகின்றன. அதற்கமைய கடந்த 2018.04.01 ஆம் திகதி தொடக்கம் 2018.06.30 ஆம் திகதி வரையிலான காலாண்டில் எவ்வித தடைகளும் இன்றி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 02. அரசாங்க சேவை ஆணைக்குழு கூட்டங்கள்

2018.04.01 ஆம் திகதியிலிருந்து 2018.06.30 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட கூட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

| மாதம் | கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஏப்ரல் | 07 |
| மே | 09 |
| ஜுன் | 08 |
| **மொத்தம்** | **24** |

## 03. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பிரிவுகளினது செயற்பாடுகள்

அரசாங்க சேவை ஆணைக்குழு பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் பின்வருமாறு.

### I. <u>**தாபனப் பிரிவு**</u>

இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் செய்யப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரக் கையளிப்புக்கு அமைய அரசாங்க சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல சேவைகளுக்குமென சேவைப் பிரமாணக் குறிப்பொன்றையும் அந்த சேவைகளுக்கு வெளியில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல பதவிகளுக்குமென ஆட்சேர்ப்புத் திட்டமொன்றையும் தயாரிப்பது தாபனப் பிரிவின் பொறுப்பாகும். அத்தகைய சேவை பிரமாணக் குறிப்புக்களையும் ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் தயாரிக்கின்ற போது அனுமதிக்கப்பட்ட சகல பதவிகளுக்கும் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் போது பின்பற்ற வேண்டிய ஆட்சேர்ப்பு முறை, ஆட்சேர்ப்புத் தகைமைகள், பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம், சேவை நிபந்தனைகள், பதவி உயர்வு முறைமை மற்றும் ஏனைய சகல விபரங்களும் உள்ளடக்கப்படுகின்றன. ஏற்புடைய சேவைப் பிரமாணக் குறிப்பை அல்லது ஆட்சேரப்புத் திட்டத்தை அனுமதிப்பதற்கு முன்னர் பதவி அனுமதித்தல் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியும் சம்பள அளவுத் திட்டம் தொடர்பாக சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபாரிசும் சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தின் வரைவு தொடர்பான தாபன பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசும் பெற்றுக்கொள்ளப்படும்.


**தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்.**

(i) அரசாங்க சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல சேவைகளுக்கும் சேவைப் பிரமாணக் குறிப்பொன்றை தயாரித்தல்.
(ii) அந்த சேவைகளுக்கு வெளியில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல பதவிகளுக்குமென ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை தயாரித்தல்.
(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய அதிகாரங்களை கையளித்தல் தொடர்பான நடவடிக்கைகள்.
(iv) அரசாங்க சேவையின் நடைமுறை விதிகளை அடிப்படையாகக் கொண்டு அறிவுறுத்தல் கோவைகளை தயாரித்தல்.
(v) சகல சேவைகளுக்குமான இடமாற்ற நடைமுறைகளை தயாரித்தல் மற்றும் திருத்துதல்.
(vi) அனுமதிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பொன்றை, ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை அல்லது இடமாற்ற நடைமுறையொன்றை திருத்துவதற்கு தேவைப்படுமிடத்து ஏற்புடைய செயலாளரின் சிபாரிசின் அடிப்படையில் அந்த பிரமாணக் குறிப்பை அல்லது நடைமுறையை திருத்தி அனுமதித்தல்.
(vii) அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் செய்யப்படும் நியமனங்கள், பதவி உயர்வுகள் தொடர்பில் எழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக முன்வைக்கப்படும் வேண்டுகோள் தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானங்களை வழங்குதல்.
(viii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், சேவைப் பிரமாணக் குறிப்புக்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், இடமாற்ற நடைமுறைகள், சுற்றுநிருபங்கள் மற்றும் கட்டளைகளுக்கு அப்பாற்பட்டு செயற்பட நேரிடும் சந்தர்ப்பங்களில் அவை தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்மானங்களை வழங்குதல்.
(ix) 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடைய நடவடிக்கைகள்

**தாபனப் பிரிவின் முன்னேற்றம் (2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 வரை)**

| தொடர் இல | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புதிய ஆட்சேரப்புத் திட்டங்கள் | 15 |
| 2 | இடமாற்ற நடைமுறைகள் | 03 |
| 3 | பதவி உயர்வுத் திட்டங்கள் | 02 |
| 4 | ஆட்சேர்ப்புத் திட்டங்களை திருத்துதல் | 28 |
| 5 | சேவைப் பிரமாணக் குறிப்புக்களை திருத்துதல் | 06 |
| 6 | இடமாற்ற நடைமுறைகளை திருத்துதல் | 04 |
| 7 | சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் சரிசெய்தல் | 01 |
| 8 | விசேட சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்காக முன்வைக்கப்படும் வேண்டுகோள்கள் | 05 |
| 9 | விசேட சந்தர்ப்பங்களில் பதவி உயர்வுத் திட்டங்களுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்காக முன்வைக்கப்படும் வேண்டுகோள்கள் | 01 |
| 10 | விசேட சந்தர்ப்பங்களில் இடமாற்றத் திட்டங்களுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்காக முன்வைக்கப்படும் வேண்டுகோள்கள் | 01 |
| 11 | கொள்கை ரீதியான விடயங்கள் | 42 |
| 12 | பொதுவான விடயங்கள் | 35 |
| 13 | உயர் நீதிமன்றம், நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை, மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் தொடர்பான விடயங்கள் | 02 |
| 14 | நிர்வாக அதிகாரங்களை கையளித்தல் | 02 |
| | **மொத்தம்** | **147** |

**தாபனப் பிரிவின் முன்னேற்றம் (2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 வரை)**




**<u>மீளாய்வுக்குரிய காலப்பிரிவில் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய விபரம்</u>**

| 2018.04.01 ஆம் திகதிக்கு நிறைவு பெறாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த எண்ணிக்கை | அ.சே.ஆ. தீர்மானங்கள் உறுதிப் படுத்தப்பட்ட எண்ணிக்கை | அ.சே.ஆ. தீர்மானம் இரத்துச் செய்யப்பட்ட எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு நிறைவு பெறாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 33 | 0 | 33 | 0 | 0 | 33 |

**உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள்**

| 2018.04.01 ஆம் திகதிக்கு நிறைவு பெறாத வழக்குகளின் எண்ணிக்கை | 2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் அ.சே.ஆ. தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | உயர் நீதிமன்றத்தினால் அ.சே.ஆ. தீர்மானங்கள் இரத்துச் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு நிறைவு பெறாத வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 66 | 01 | 67 | 01 | 0 | 66 |

**மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள்**

| 2018.04.01 ஆம் திகதிக்கு நிறைவு பெறாத வழக்குகளின் எண்ணிக்கை | 2018.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அ.சே.ஆ. தீர்மானங்கள் உறுதிப்படுத்தப்பட்ட எண்ணிக்கை | மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அ.சே.ஆ. தீர்மானங்கள் இரத்துச் செய்யப்பட்ட மற்றும் நிவாரணங்கள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு நிறைவு பெறாத வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 11 | 01 | 11 | 0 | 0 | 11 |

- ❖ மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 02 ஆகும்.
- ❖ நிர்வாக விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்ஸ்மன்), மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மற்றும் பொது மனுக்குழுவுக்கு மீளாய்வுக்குரிய காலப்பிரிவில் முறைப்பாடுகள் முன்வைக்கப்படவில்லை.

## II. நியமனப் பிரிவு

இல 1955/22 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டுள்ள, இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள, இல 1989/29 மற்றும் 2016.01.29 ஆம் திகதிய, இல 1990/24 மற்றும் 2016.10.27 ஆம் திகதிய, இல 1992/7 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களின் (அமைச்சு செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரசாங்க சேவை மற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) நியமனங்கள் தொடர்பிலான பின்வரும் செயற்பாடுகள் நியமனப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**நியமனப் பிரிவின் செயற்பாடுகள்**

i. அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்கள் / பதவி உயர்வுத் திட்டங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்தல்.
ii. சேவை நிரந்தரமாக்கல், சேவை முடிவுறுத்தல், முன்னர் வகித்த பதவிக்கு மீள அனுப்புதல்.
iii. பதில் கடமை / கடமை நிறைவேற்றல் அடிப்படையிலான நியமனம்,
iv. விடுவித்தல் (நிரந்தர / தற்காலிக)
v. ஒப்பந்த அடிப்படையிலான நியமனம், பதவி விலகல், சேவைக்கு/ பதவிக்கு மீண்டும் நியமித்தல், ஓய்வு பெறச்செய்தல் (அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 30/88 பிரகாரம், விருப்ப, வயது 60 பூர்த்தியாவதன் மீது, மருத்துவ காரணிகள் மீது)
vi. ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள நியமித்தல். சேவைப் பிரமாணக் குறிப்புக்களிலுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு (ஏற்புடைய சந்தர்ப்பங்களில்) நியமித்தல்.
vii. பதவிநிலை உத்தியோகத்தர்களின் நியமனங்களுக்கு ஏற்புடையதாக சுகாதார சேவைக்குழுவினால் மற்றும் கல்விச் சேவைக்குழுவினால் விதிக்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.


viii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் கட்டளைகள் / தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் மற்றும் உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் மனுக்கள் தொடர்பாக அவதானிப்புரைகள் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பித்தல். நிர்வாக விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மன்), மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மற்றும் பொது மனுக்குழுவுக்கு அவதானிப்புரைகள் சமர்ப்பித்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவை பிரதிநிதித்துவம் செய்தல்.

ix. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடைய நடவடிக்கைகள்.

**நியமனப் பிரிவின் முன்னேற்றம் (2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரை)**

| தொடர் இல | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓய்வு பெறுகை | 104 |
| 2 | நிரந்தரமாக்கல் | 165 |
| 3 | ஆட்சேர்ப்பு | 58 |
| 4 | ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் அமர்த்தல் | 160 |
| 5 | ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் | 44 |
| 6 | வினைத்திறன்காண் தடைதாண்டல் தொடர்பான தீர்மானங்கள் | 170 |
| 7 | பதில் கடமை / கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமித்தல் | 269 |
| 8 | விடுவித்தல் | 11 |
| 9 | உள்ளீர்ப்புச் செய்தல் | 04 |
| | **மொத்தம்** | **985** |

**நியமனப் பிரிவின் முன்னேற்றம் (2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரை)**



2018.04.01 ஆம் திகதிக்கு பிரிவினால் தோற்றுவதற்கு எஞ்சியிருந்த வழக்குகள் மற்றும் முறைப்பாடுகள் பற்றிய விபரங்கள் மற்றும் அவற்றில் 2018.06.30 ஆம் திகதியன்று நிறைவுபெற்றுள்ள வழக்குகள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை.

**உயர் நீதிமன்ற வழக்குகள்**

| | 2018.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2018.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 40 | 01 |
| 2018.04.01 ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | --- | --- |

**மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்**

| | 2018.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2018.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 14 | --- |
| 2018.04.01 ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | --- | --- |

**நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்**

| | 2018.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2018.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 89 | 05 |
| 2018.04.01 ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | 03 | --- |

2018.04.01 முதல் 2018.06.30 வரையிலான காலப்பகுதியில் மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் நிர்வாக விடயங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளரிடமும் (ஒம்புட்ஸ்மன்) எந்தவித மனுக்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.

**iii. பதவி உயர்வுப் பிரிவு**

இல 1955/22 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டுள்ள, இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள, இல 1989/29 மற்றும் 2016.01.29 ஆம் திகதிய, இல 1990/24 மற்றும் 2016.10.27 ஆம் திகதிய, இல 1992/7 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களின் (அமைச்சு செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரசாங்க சேவை மற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) நியமனங்கள் /பதவி உயர்வுகள் தொடர்பிலான பின்வரும் செயற்பாடுகள் பதவி உயர்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**iii.i பதவி உயர்வுப் பிரிவின் செயற்பாடுகள்**

i. ஒவ்வொரு சேவைக்கும் அல்லது உத்தியோகத்தர் வகுதிகளுக்கும் அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள்,பதவி உயர்வுத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு செய்யப்படும் பதவி உயர்வுகளைப் போன்றுசேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் போட்டிப் பரீட்சைகள்,கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படும் பதவி உயர்வுகள்.

ii. சேவைமூப்பு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் பெறுபேறுகளுக்கு அமைய பதவி உயர்வுகள் வழங்கி ஏற்புடைய பதவிகளுக்கு நியமித்தல்.

iii. அகில இலங்கை சேவைகளில் தரம் 1 மற்றும் அதற்கு மேலுள்ள தரங்களிலுள்ள உத்தியோகத்தர்களை ஒரு பதவியிலிருந்து இன்னுமோர் பதவிக்கு மாற்றும் போது அதற்கான முன் அனுமதியை வழங்கி ஏற்புடைய புதிய பதவிக்கு நியமித்தல்.

iv. பிரதேச செயலாளர் பதவிகளுக்கு நியமித்தல் (நிரந்தர, பதில் கடமை, கடமை நிறைவேற்றல்)

v. பதவிநிலை உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகளுக்கு ஏற்புடையதாக சுகாதார சேவைக்குழுவினால் மற்றும் கல்விச் சேவைக்குழுவினால் விதிக்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

vi. மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் கட்டளைகள் / தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் மற்றும் உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் மனுக்கள் தொடர்பாக அவதானிப்புரைகள் மற்றும் தேவையான அறிக்கைகளை சமர்ப்பித்தல்.


vii. பொது மனுக்குழு, நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்), மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு தேவையான அவதானிப்பு அறிக்கைகளை வழங்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

viii. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடைய நடவடிக்கைகள்.

**iii.ii பதவி உயர்வுப் பிரிவின் முன்னேற்றம் (2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 வரை)**

| | **விடயம்** | |
|---|---|---|
| 1 | ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவி உயர்வு | 72 |
| 2 | தேர்வு அடிப்படையிலான பதவி உயர்வு | 154 |
| 3 | பதவிகளுக்கு நியமித்தல் | 190 |
| 4 | பதில் கடமை / கடமை நிறைவேற்றுவதற்கு நியமித்தல் | 22 |
| | **மொத்தம்** | **438** |

**பதவி உயர்வுப் பிரிவின் முன்னேற்றம் (2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 வரை)**



2018.04.01 ஆம் திகதிக்கு பிரிவினால் தோற்றுவதற்கு எஞ்சியிருந்த வழக்குகள் மற்றும் முறைப்பாடுகள் பற்றிய விபரங்கள் மற்றும் அவற்றில் 2018.06.30 ஆம் திகதியன்று நிறைவுபெற்றுள்ள வழக்குகள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை.

**உயர் நீதிமன்ற வழக்குகள்**

| | 2018.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு நிறைவடைந்தவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2018.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 42 | --- |
| 2018.04.01 ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | --- | --- |

**மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்**

| | 2018.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு நிறைவடைந்தவைகளின் எண்ணக்கை |
|---|---|---|
| 2018.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 04 | --- |
| 2018.04.01 ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | --- | --- |

**நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்**

| | 2018.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2018.06.30ஆம் திகதிக்கு நிறைவடைந்தவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2018.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 71 | 05 |
| 2018.04.01 ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | 04 | --- |

2018.04.01 முதல் 2018.06.30 வரையிலான காலப்பகுதியில் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அல்லது நிர்வாக விடயங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளரிடம் (ஒம்புட்ஸ்மன்) மனுக்கள் முன்வைக்கப்படவில்லை.

**<u>iv.ஒழுக்காற்றுப் பிரிவு</u>**

2016.10.19 ஆம் திகதிய இல 1989/27,1989/28, 1989/29 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய இல 1992/7 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் 2016.10.27 ஆம் திகதிய 1990/24, 1990/25 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தவிர்ந்த அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கையளிப்பு தொடர்பான இல 1955/22 மற்றும் 2016.02.25 மற்றும் இல. 2016/37 மற்றும் 2017.04.26 ஆம் திகதி மூலம் திருத்தப்பட்ட இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஒழுக்காற்றுப் பிரிவுக்கு கிடைக்கப்பெறும் சகல கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பாக விரிவாக ஆய்வு செய்யப்பட்டு பக்கச்சார்பற்ற தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு தெளிவாக அந்த விடயம் தொடர்பான தேவையான அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்து தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல்.

**iv. ஒழுக்காற்றுப் பிரிவின் செயற்பாடுகள்**

மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு உட்படுகின்ற உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று தொடர்பான நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1. **ஒழுக்காற்று நடவடிக்கையொன்று தொடர்பாக**

i. திணைக்களத் தலைவரால் அல்லது அமைச்சு செயலாளரொருவரால் மேற்கொள்ளப்படும் ஆரம்ப விசாரணை அறிக்கையொன்று ஒழுக்காற்றுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற பின்னர் அது தொடர்பாக சிறந்த முறையில் ஆய்வு செய்து ஏற்புடைய தகவல்கள், ஆவணங்கள், அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் ஆகியவற்றை நிறைவு செய்த பின்னர் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றப்பத்திரமொன்றை வழங்குதல் அல்லது வழங்காதிருத்தல் தொடர்பான பொருத்தமான தீர்மானமொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும்.

ii. குற்றப்பத்திரமொன்றை வழங்க தீர்மானிக்குமிடத்து அந்த குற்றப்பத்திரத்தை ஏற்புடைய உத்தியோகத்தருக்கு நிர்வாக அதிகாரி மற்றும் அமைச்சுச் செயலாளர் மற்றும் திணைக்களத் தலைவர் ஊடாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அந்த குற்றப்பத்திரத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரினால் சமர்ப்பிக்கப்படும் பதில் தொடர்பாக ஏற்புடைய திணைக்களத் தலைவர், அமைச்சுச் செயலாளர் மற்றும் நிர்வாக அதிகாரியின் அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளை பரிசீலனைக்கு எடுத்து முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையொன்றை நடாத்துதல் அல்லது நடத்தாமலிருத்தல் தொடர்பாக தீர்மானமொன்று எடுக்கப்படும்.

iii. முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையொன்று நடாத்துவதற்கு தீர்மானிக்கப்படுமிடத்து அதற்கான அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பேணப்பட்டு வரும் விசாரணை உத்தியோகத்தர்களின் குழாமிலிருந்து பொருத்தமான உத்தியோகத்தர் விசாரணை உத்தியோகத்தராக நியமித்து முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையை நடாத்துமாறு பணிக்கப்படும். ஏதேனும் காரணத்தினால் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணை நடத்தாமலிருப்பதற்கு தீர்மானிக்கப்படுமிடத்து குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதிலையும் அதற்காக திணைக்களத் தலைவர், அமைச்சு செயலாளர் மற்றும் நிர்வாக அதிகாரி ஆகியோரினால் முன்வைக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரை சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிப்பதற்கு அல்லது பொருத்தமான ஒழுக்காற்றுத் தண்டனையொன்றை விதிப்பதற்கு தீர்மானிக்கப்படும்.

iv. முறைமைசார் ஒழுக்காற்று விசாரணை நடைப்பெற்றால் அந்த விசாரணையின் அறிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற பின்னர் அந்த முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையின் போது முன்வைக்கப்பட்ட சகல வாய்மூல மற்றும் எழுத்துமூல சாட்சியங்கள், விசாரணை உத்தியோகத்தரின் அறிக்கை, வழக்கு தொடுநரின் அறிக்கை மற்றும் எதிர்காப்பு உத்தியோகத்தரின் அறிக்கை என்பனவற்றை பரிசீலனைக்கு எடுத்து குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரை சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிப்பதற்கு அல்லது ஒரு குற்றத்திற்கு அல்லது சில குற்றங்களுக்கு அல்லது சகல குற்றங்களுக்கும் குற்றவாளியென தீர்மானித்து பொருத்தமான ஒழுக்காற்றுக் கட்டளையொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும்.

v. மேலும் ஒழுக்காற்று நடைமுறையின் ஒரு பகுதியாக எவரேனுமொரு குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரை பணித்தடை செய்தல் அல்லது அவ்வாறு பணித்தடை செய்த பின்னர் அவரை மீண்டும் சேவையில் அமர்த்துதல் அல்லது கட்டாய லீவில் அனுப்புதல் அல்லது முடிவுறாத ஒழுக்காற்று விடயங்கள் இருக்கும் சந்தர்ப்பத்தில் ஏற்புடைய உத்தியோகத்தர் ஓய்வுபெற வேண்டி ஏற்பட்டால் அத்தகைய ஓய்வுபெறுதலை ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 12 ஆம் பிரிவுக்கு அமைய மேற்கொள்ளல்.

vi. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடைய நடவடிக்கைகள்.

2. **கல்விச் சேவைக்குழு மற்றும் சுகாதார சேவைக்குழுவினால் வழங்கப்படும் ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு ஏற்புடைய மேன்முறையீடுகள் தொடர்பாக**

அரசியலமைப்பின் 56(1) ஆம் உறுப்புரையின் விதிமுறைகளுக்கு அமைய 2016.10.19 ஆம் திகதிய இல 1989/27,1989/28, 1989/29 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய இல 1992/7 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக கல்விச் சேவைக்குழுவினால் மற்றும் 2016.10.27 ஆம் திகதிய 1990/24, 1990/25 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக சுகாதார சேவைக்குழுவினாலும் வழங்கப்படும் ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு எதிராக அந்த உத்தியோகத்தர்களினால் முன்வைக்கப்படும் மேன்முறையீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், அந்த மேன்முறையீடு தொடர்பாக ஏற்புடைய குழுவினால் மற்றும் அந்த அலுவலர்களின் நிர்வாக அதிகாரியினால் சமர்ப்பிக்கப்படும் அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகளை கருத்திற்கொண்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குதல் / மேன்முறையீட்டை நிராகரித்தல்.

**3.பதவி வெறிதாக்கல் அறிவித்தல்களுக்கு எதிரான மேன்முறையீடுகள் தொடர்பாக**

2016.10.19 ஆம் திகதிய இல 1989/27,1989/28, 1989/29 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய இல 1992/7 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் 2016.10.27 ஆம் திகதிய 1990/24, 1990/25 மற்றும் 2017.02.01 ஆம் திகதிய இல 2004/49 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தவிர்ந்த அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கையளிப்பு தொடர்பான இல 1955/22 மற்றும் 2016.02.25 இல. 2016/37 மற்றும் 2017.04.26 ஆம் திகதி மூலம் திருத்தப்பட்ட இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய உத்தியோகத்தர்களின் சேவை வெறிதாக்கல் அறிவித்தல்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளிலுள்ள விடயங்கள் மற்றும் அந்த மேன்முறையீடுகள் தொடர்பாக அந்த உத்தியோகத்தர்களின் நிர்வாக அதிகாரிகளினால் சமர்ப்பிக்கப்படும் அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகளை பரிசீலனைக்கு எடுத்து அந்த உத்தியோகத்தர்களை பொருத்தமானவாறு மீண்டும் சேவையில் அமர்த்தல் / அமர்த்தாமலிருத்தல்.

4. **உயர் நீதிமன்றம், நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு, பாராளுமன்ற பொது மனுக்குழு மற்றும் ஒம்புட்ஸ்மனிடம் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக.**


ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு அல்லது அவ்வாறான ஒழுக்காற்றுத் நடவடிக்கை தொடர்பான தீர்மானங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மனுக்கல் தொடர்பாக அவதானிப்புரைகளை தயாரித்தல், நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை, பாராளுமன்ற பொது மனுக்குழு மற்றும் ஒம்புட்ஸ்மனிடம் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக அவதானிப்புரைகளை தயாரித்தல் மற்றும் மேன்முறையீடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் தினங்களில் அந்த நிறுவனங்களின் முன் தோற்றுதல் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவினால் செய்யப்படும் விசாரணைகள் தொடர்பாக பொருத்தமான முறையில் நடவடிக்கை எடுத்தல்.

**vi.ii ஒழுக்காற்றுப் பிரிவின் முன்னேற்றம் (2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 வரை)**

| தொ. இல | விடயம் | வழங்கப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை 2018.04.01 தொடக்கம் 2018.06.30 வரை |
|---|---|---|
| 01 | குற்றப்பத்திரங்கள் வழங்குதல் | 10 |
| 02 | குற்றங்களிலிருந்து விடுவித்தல் | 02 |
| 03 | ஏனைய ஒழுக்காற்றுத் தண்டனைகள் | 04 |
| 04 | மீண்டும் சேவையில் அமர்த்தல் | 02 |
| 05 | மேன்முறையீடுகளை நிராகரித்தல் | 08 |

| | | |
|---|---|---|
| 06 | ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களை நியமித்தல் | 08 |
| 07 | ஒழுக்காற்று காரணங்களுக்கான ஓய்வுபெறுகையினை சாதாரண ஓய்வுபெறுகையாக மாற்றுதல் | 02 |
| 08 | ஏனைய பொதுவான கட்டளைகள் | 63 |
| 09 | நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையில் விசாரணையிலுள்ள மேன்முறையீடுகளுக்கான அவதானிப்புரைகள் | 14 |
| 10 | நீதிமன்ற விண்ணப்பங்களுக்கான அவதானிப்புரைகள் | 05 |
| | **மொத்தம்** | **118** |

**ஒழுக்காற்றுப் பிரிவின் முன்னேற்றம் (2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 வரை)**



**மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விபரம்**

| | **உயர் நீதிமன்றத்தின் விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையின் மேன்முறையீடுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 2018.04.01 ஆம் திகதியன்று தோற்றுவதற்கு எஞ்சியிருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 10 | 08 | 116 |
| 2018.04.01 ஆம் திகதியன்று எஞ்சியிருந்த எண்ணிக்கையில் 2018.06.30 ஆம் திகதியன்று நிறைவடைந்துள்ளவை | - | 01 | 07 |
| 2018.04.01 ஆம் திகதி தொடக்கம் 2018.06.30 ஆம் திகதி வரை புதிதாக தொடுக்கப்பட்டவை | - | - | 04 |
| 2018.06.30 ஆம் திகதி நடவடிக்கை எடுப்பதற்கு எஞ்சியுள்ள வழக்குகள் | 10 | 07 | 113 |

2018.04.01 முதல் 2018.06.30 வரையிலான காலப்பகுதியில் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையில் 120 மேன்முறையீடுகளுக்கு சபையின் முன் தோன்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**v. <u>மேன்முறையீட்டுப் பிரிவு</u>**

அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் வழங்கப்படும் கட்டளையினால் அதிருப்திக்குள்ளாகும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசியலமைப்பின் 58 (1) உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கின்ற எழுத்துமூல மேன்முறையீடு தொடர்பாக தீர்மானமெடுப்பதற்கும் அந்த மேன்முறையீடு தொடர்பாக உரிய காலஎல்லைக்குள் தீர்மானத்தை வழங்குவதற்கும் மேன்முறையீட்டுப் பிரிவினால் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

**vii. மேன்முறையீட்டுப் பிரிவின் செயற்பாடுகள்**

i. அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்படும் ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் ஏற்புடைய அமைச்சு/ திணைக்களங்களிலிருந்து அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் அடங்கிய அறிக்கைகளை கோருதல். அதன் பின்னர் ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் விரிவான அறிக்கையொன்றை தயாரித்து அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல்.

ii. மேன்முறையீடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானங்களை மேன்முறையீட்டாளருக்கும் ஏனைய தரப்பினருக்கும் அறிவித்தல்.

iii. மேன்முறையீடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கும் மேன்முறையீடுகள் தொடர்பில் அவதானிப்பு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் அந்த மேன்முறையீடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு சார்பில் அந்த நியாய சபையின் முன் தோன்றுதல்.

iv. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் தொடர்பாக பொது மனுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புரைகளை வழங்குதல்.

v. பொது மனுக்குழுவினால் முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அக்குழுவின் முன் தோன்றுதல்.

vi. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புரைகள் / சிபாரிசுகளை முன்வைத்தல்.

vii. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் தொடர்பாக நிர்வாக விடயங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளரிடம் (ஒம்புட்ஸ்மன்) சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புரைகளை வழங்குதல்.

viii. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புரைகளை வழங்குதல்.


ix. உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தகவல்களை வழங்குதல்.

x. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடைய நடவடிக்கைகள்.

**v.ii மேன்முறையீட்டுப் பிரிவின் முன்னேற்றம் (2018.04.01 - 2018.06.30 ஆம் திகதி வரை)**

| தொ. இல | விடயம் | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | | 348 |
| 2 | 2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரையில் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகள் அடங்கிய அறிக்கைகள் கோரப்பட்டுள்ள மேன்முறையீடுகளின் எண்ணிக்கை (முன்னைய வருடங்களும் உள்ளடங்களாக) | | 307 |
| 3 | 2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரையில் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை (முன்னைய வருடங்களும் உள்ளடங்களாக) | | 342 |
| | நிறைவு செய்யப்பட்ட மேன்முறையீடுகள் பற்றிய விபரம் பின்வருமாறு | | |
| | ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பான மேன்முறையீடுகள் | 51 | |
| | பதவி உயர்வுகள் தொடர்பான மேன்முறையீடுகள் | 17 | |
| | பதவி வெறிதாக்கல் தொடர்பான மேன்முறையீடுகள் | 97 | |
| | இடமாற்றங்கள் தொடர்பான மேன்முறையீடுகள் | 126 | |
| | நியமனங்கள் தொடர்பான மேன்முறையீடுகள் | 01 | |
| | பணித்தடை செய்தல் தொடர்பான மேன்முறையீடுகள் | 11 | |
| | வேறு | 39 | |
| | **மொத்தம்** | **342** | |
| 4 | 2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை | | 01 |
| 5 | 2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற மேன்முறையீட்டு நியாய சபை வழக்குகளின் எண்ணிக்கை | | 01 |
| | 2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரையில் மேன்முறையீட்டு நியாய சபையினால் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | | 18 |
| 6 | 2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற பொதுமனுக்குழுவின் விசாரணைகளின் எண்ணிக்கை | | 03 |

**மேன்முறையீட்டுப் பிரிவின் முன்னேற்றம் (2018.04.01 - 2018.06.30 ஆம் திகதி வரை)**



**மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விபரம்**

| விபரம் | 2018.04.01ஆம் திகதியில் இருந்த வழக்குகள் | 2018.04.01ஆம் திகதி முதல் 2018.06.30ஆம் திகதி வரை புதிதாக கிடைக்கப் பெற்றவைகளின் எண்ணிக்கை | 2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30ஆம் திகதி வரை உயர் நீதிமன்றம் / மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை | 2018.06.30 ஆம் திகதிக்கு உள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உயர் நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை | 36 | --- | --- | 36 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை | 04 | 01 | --- | 05 |

2018.04.01 முதல் 2018.06.30 வரையிலான காலப்பகுதியில் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையின் முன் தோன்றிய மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 169 ஆகும்.

### 04. கல்விச் சேவைக்குழு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 56(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இல 1989/27 மற்றும் 2016.10.19 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்விச் சேவைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது.

இல 1989/29 மற்றும் 2016.10.19 திகதிய, இல 1992/7 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய மற்றும் இல 2014/03 மற்றும் 2017.04.11 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் மேற்படி குழுவுக்கு அதிகாரக் கையளிப்புக்கள் மற்றும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இல 2014/03 மற்றும் 2017.04.11 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் 2017.04.07 ஆம் திகதி முதல் கல்விச் சேவைக்குழுவின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 4.1 கல்விச் சேவைக்குழுவின் செயற்பாடுகள்

இல. 2014/03 மற்றும் 2017.04.11 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக கல்விச் சேவைக்குழுவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்கள் / பதவி உயர்வுத் திட்டங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு, சேவை நிரந்தரமாக்கல், சேவை முடிவுறுத்தல், முன்னர் வகித்த பதவிக்கு மீள அனுப்புதல், பதில் கடமை / கடமை நிறைவேற்றல் அடிப்படையிலான நியமனம், விடுவித்தல் (நிரந்தர / தற்காலிக),பதவி இராஜினாம செய்தல்,பதவி வெறிதாக்கல் அறிவித்தல்களுக்கு எதிரான மேன்முறையீடுகளை பரிசீலனைக்கு எடுத்தல்,சேவைக்கு/ பதவிக்கு மீண்டும் நியமித்தல், ஓய்வு பெறச்செய்தல் மற்றும் ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள சேவைக்கு அமர்த்தல்.

ii. அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்கள் / பதவி உயர்வுத் திட்டங்களுக்கு ஏற்ப பதவி உயர்வு வழங்குதல் (ஒரு தரத்திலிருந்து இன்னொரு தரத்திற்கு / சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில்)

iii. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல்.

iv. கல்விச் சேவைக்குழுவின் விடயப் பரப்புக்குள் வரக்கூடிய உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையவாறு தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல்.

v. அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான பிரச்சினைகள் (இல PSC/EST/02-03/05/2016 மற்றும் 2016.12.09 ஆம் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தை அறிவித்தல்.

vi. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடைய நடவடிக்கைகள்

**4.2 கல்விச் சேவைக்குழுவின் நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனாக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

**i.** வினைத்திறன்மிக்க மற்றும் பயனுள்ள சேவையை வழங்கும் நோக்கில் கடமைகளை நிறைவேற்றும் போது எழுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் பிரிவின் உத்தியோகத்தர்கள் ஒன்றுசேர்ந்து கலந்துரையாடுதல்.

**ii.** கடமைகளை நிறைவேற்றும் போது எழுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுதல்.

**iii.** சகல உத்தியோகத்தர்களினதும் பங்கேற்புடன் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்கு வார இறுதி நாட்களில் கடமையில் ஈடுபடுதல்.

**iv.** கல்வி அமைச்சினால் பதில் கடிதங்கள் தாமதமடையும் போது அது தொடர்பில் நினைவூட்டல் கடிதங்களை அனுப்புதல்.


**v.** கல்வி அமைச்சினால் துரிதமாக செயற்பட வேண்டிய விடயங்களுக்கான பதில் கடிதங்கள் தாமதமடையும் போது அமைச்சுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தேவையான தகவல்களை தொலைநகல் மூலம் பெற்றுக்கொள்ளல்.

vi. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடைய நடவடிக்கைகள்

**4.3 கல்விச் சேவைக்குழுவின் முன்னேற்றம் (2018.04.01 முதல் 2018.06.30ஆம் திகதி வரை)**

| தொ.இ | விடயம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 01 | ஆட்சேரப்பு | 583 | |
| | ஓய்வுபெறுகை | 90 | |
| | நிரந்தரமாக்கல் | 70 | |
| | பதவி உயர்வு | 178 | |
| | உள்ளீர்ப்பு | 144 | |
| | விடுவித்தல் | 34 | |
| | வினைத்திறன்காண் தடைத்தாண்டல் தீர்மானங்கள் | 24 | |
| | பதவிகளுக்கு நியமித்தல் | 19 | |
| | இடமாற்றங்கள் | 32 | |
| | ஏனைய கட்டளைகள் | 04 | |
| | **மொத்தம்** | | **1178** |
| 02 | **ஒழுக்காற்று** | 03 | |
| | குற்றப்பத்திரங்கள் வழங்குதல் | 01 | |
| | குற்றப்பத்திரங்களை திருத்துதல் | 02 | |
| | ஒழுக்காற்று நடவடிக்கைகளை முடிவுறுத்தல் | 03 | |
| | ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களை நியமித்தல் | 15 | |
| | ஏனைய பொதுவான கட்டளைகள் | | **24** |
| | **மொத்தம்** | | |
| 03 | **அரசியல் பழிவாங்கல்கள்** | | |
| | பொதுவான கட்டளைகள் | 06 | **06** |
| | **மொத்தம்** | | **1208** |

**கல்விச் சேவைக்குழுவின் முன்னேற்றம் (2018.04.01 முதல் 2018.06.30ஆம் திகதி வரை)**




**4.4 கல்விச் சேவைக்குழுவுக்கு ஏற்புடைய வழக்குகள் பற்றிய விபரம்**

- கல்விப் பணிப்பாளர் (விளையாட்டு மற்றும் உடற்கல்வி) பதவிக்கு நியமித்தல்.
  வழக்கு இலக்கம் SC(FR) 96/2017 – சட்டமா அதிபருக்கு ஏற்புடைய அவதானிப்புரைகள் அனுப்பப்பட்டுள்ளன.
- வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளரை நியமித்தல்.
  வழக்கு இலக்கம்SC(FR) 110/2017 – சட்டமா அதிபருக்கு ஏற்புடைய அவதானிப்புரைகள் அனுப்பப்பட்டுள்ளன.

**05. சுகாதார சேவைக்குழு**

இல 2004/49 மற்றும் 2017.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மற்றும் இல 2009/18 மற்றும் 2017.03.08 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட இல 1990/24 மற்றும் 2016.10.27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2016 நவம்பர் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சுகாதார சேவைக்குழுவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இல 1990/25 மற்றும் 2016.10.27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2016.10.27 முதல் அமுலுக்கு வரும் வகையில் சுகாதார சேவைக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 5.1 சுகாதார சேவைக்குழுவின் செயற்பாடுகள்

மேற்படி கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் முன்வைக்கப்படும் விடயங்கள் தொடர்பாக தீர்மானங்களை எடுப்பது இக்குழுவின் கடமைப் பொறுப்பாகும்.

### 5.2 சுகாதார சேவைக்குழுவின் நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனாக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

**i.** அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது நிகழும் கடமை தொடர்பான பிரச்சினைகள் காரணமாக ஏற்படும் தாமதங்களை தவிர்க்கும் நோக்கில் சுகாதார அமைச்சுடன் கூட்டங்களை நடாத்தி அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

**ii.** இப்பிரிவுக்கு புதிதாக இரண்டு அரச முகாமைத்துவ உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் இருவருக்கும் மருத்துவ அதிகாரிகளின் தரம் II பதவி உயர்வு நடவடிக்கைகளும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும் கையளிக்கப்பட்டன.


**iii.** சுகாதார சேவைக்குழுவுக்கு தற்போது பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக இலங்கை மருத்துவ சேவை, இலங்கை பல் மருத்துவ சேவை மற்றும் திணைக்களப் பதவிகளுக்கு ஏற்புடைய உள்ளீர்ப்பு தொடர்பான நடவடிக்கைகள், தாதியர், துணை மற்றும் இடைநிலை மருத்துவ மருத்துவ சேவைகளிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் அமர்த்தல் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சுகாதார சேவைக்குழுவுக்கு மற்றும் சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு நியமன அதிகாரம் வழங்கப்பட்ட சகல பதவிகளுக்கும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீள சேவையில் அமர்த்தல் பணிகள் பொறுப்பளிக்கப்பட்டிருப்பதனால் மற்றும் பிரிவுக்கு ஒரு மாதத்திற்கு அண்ணளவாக 500 கடிதங்கள் கிடைப்பதன் காரணத்தினால் தற்போது இந்த அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக உதவிச் செயலாளர்கள் இருவர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் மூவரை பெற்றுத்தருமாறு வேண்டுதல்.

### 5.3 சுகாதார சேவைக்குழுவின் முன்னேற்றம் (2018.04.01 - 2018.06.30 ஆம் திகதி வரை)

| தொ.இ | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஓய்வுபெறுகை | 63 |
| 02 | நிரந்தரமாக்கல் | 578 |
| 03 | ஆட்சேர்ப்பு | 09 |
| 04 | 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட இது வரையில் முறையான நியமிப்புக் கடிதம் வழங்கப்படாத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு முறையான நியமிப்புக் கடிதங்களை வழங்குதல். | 168 |
| 05 | ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு | 16 |
| 06 | பதவி உயர்வு | 843 |
| 07 | பதவிகளுக்கு நியமித்தல் | 05 |
| 08 | விசேட தரத்திற்கு நியமித்தல் | 33 |
| 09 | விடுவித்தல் | 20 |
| 10 | இடமாற்றம் செய்தல் | 3358 |
| 11 | வினைத்திறன்காண் தடைத்தாண்டல் நிவாரணம் வழங்குதல் பற்றிய தீர்மானங்கள் | 59 |
| 12 | பதவி விலகல் | 07 |
| 13 | பதில் கடமை | 07 |
| 14 | குற்றப்பத்திரங்கள் வழங்குதல் | 11 |
| 15 | குற்றப்பத்திரங்களை திருத்துதல் | 03 |
| 16 | குற்றப்பத்திரங்கள் வழங்காது குற்றங்களிலிருந்து விடுவித்தல் | 01 |
| 17 | ஏனைய ஒழுக்காற்று தண்டனைகள் | 04 |
| 18 | மீண்டும் சேவையில் அமர்த்துதல் | 02 |

| | | |
|---|---|---|
| 19 | முறையான ஒழுக்காற்று விசாரணைகளுக்காக உத்தியோகத்தர்களை நியமித்தல் | 10 |
| 20 | ஒழுக்காற்று காரணங்களுக்கான ஓய்வுபெறுகையினை சாதாரண ஓய்வுபெறுகையாக மாற்றுதல் | 01 |
| 21 | ஏனைய பொதுவான கட்டளைகள் | 16 |
| 22 | ஒழுக்காற்று நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஏனைய கட்டளைகள் | 13 |
| | **மொத்தம்** | **5227** |

**சுகாதார சேவைக்குழுவின் முன்னேற்றம் (2018.04.01 - 2018.06.30 ஆம் திகதி வரை)**



**சுகாதார சேவைக்குழுவுக்கு ஏற்புடைய வழக்குகள் பற்றிய விபரம்**

- மருத்துவ உத்தியோகத்தர் திரு ஆனந்த ஜயலால் மீண்டும் சேவையில் அமர்த்தல் - வழக்கு இலக்கம் SC(FR) 174/2018 – சட்டமா அதிபருக்கு ஏற்புடைய அவதானிப்புரைகள் அனுப்பப்பட்டுள்ளன.

- SC(FR) 153/2018 – வழக்கு தொடர்பில் சட்டமா அதிபருக்கு ஏற்புடைய அவதானிப்புரைகள் அனுப்பப்பட்டுள்ளன.

**5.5 மீளாய்வுக்குரிய காலப்பகுதிக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் பற்றிய விபரம்**

| விபரம் | 2018.04.01ஆம் திகதியில் இருந்த வழக்குகள் | 2018.04.01ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரை புதிதாக கிடைக்கப் பெற்றவைகளின் எண்ணிக்கை | உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட வழக்குகள் மற்றும் அ.சே.ஆ. தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட வழக்குகள் | உயர் நீதிமன்றத்தினால் அ.சே.ஆ. தீர்மானங்களை இரத்துச் செய்த வழக்குகள் | 2018.06.30 ஆம் திகதிக்கு உள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| உயர் நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை | 05 | 02 | --- | --- | 07 |

**06. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சேவைப் பெறுநருக்கு வழங்கும் சேவையை மேலும் வினைத்திறனுள்ள மற்றும் பயனுள்ள விதத்தில் நிறைவேற்றுவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**<u>தாபனப் பிரிவு</u>**

i. தாபனப் பிரிவின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்கும் பொருட்டு ஒவ்வொரு மாதமும் நினைவூட்டல் கடிதங்களை அனுப்புதல்.
ii. பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கு ஏற்புடைய அமைச்சின் அந்தந்த விடயப் பரப்பில் தேர்ச்சிபெற்ற உத்தியோகத்தர்களை அழைத்து கலந்துரையாடல்களை நடாத்துதல்.
iii. பதில் கடிதங்களை அனுப்புவதற்கு தாமதிக்கும் அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மூலம் அறிவித்து ஏற்புடைய தகவல்களை தொலைநகல் ஊடாக பெற்றுக்கொள்ளல்.
iv. ஒவ்வொரு வருடமும் சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும் நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர்களை வரவழைத்து அரசாங்க சேவை ஆணைக்குழுவுடன் கடமைகளை நிறைவேற்றும் போது முகம் கொடுக்க நேரிட்ட பிரச்சினைகள் தொடர்பில் மீளாய்வு செய்தல்.
v. ஒவ்வொரு மாதமும் ஊழியர் கூட்டங்களை நடாத்தி ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுதல், கடமைப் பொறுப்புக்கள் அதிகமாக உள்ள உத்தியோகத்தர்களின் வேலைகளை பகிர்தல்.

**<u>நியமனப் பிரிவு</u>**

i. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்கி அவர்களது உளப்பாங்கு மற்றும் அறிவை விருத்தி செய்தல்.
ii. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் தாமதத்தை தவிர்க்கும் பொருட்டும் சேவையை எதிர்பார்த்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு துரிதமான சேவையை வழங்கும் பொருட்டும் முறையான நினைவூட்டல்களை வழங்கி கடிதத் தொடர்புகளை குறைத்து கலந்துரையாடல்களை

நடாத்துவதன் மூலம் நியமனப் பிரிவின் செயற்பாடுகளை வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பதவி உயர்வுப் பிரிவு**

i. பிரிவின் நடவடிக்கைகளை வினைத்திறனாக்குவதற்கு புதிய வழிமுறைகள் மற்றும் அறிவுறுத்தல் கடிதங்கள் நிர்வாக அதிககாரிகளுக்கு வழங்கப்பட்டது. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்கி அவர்களது உளப்பாங்கு மற்றும் அறிவை விருத்தி செய்தல்.

ii. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் தாமதத்தை தவிர்க்கும் பொருட்டும் சேவையை எதிர்பார்த்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு துரிதமான சேவையை வழங்கும் பொருட்டும் முறையான நினைவூட்டல்களை வழங்கி கடிதத் தொடர்புகளை குறைத்து கலந்துரையாடல்களை நடாத்துவதன் மூலம் பதவியுயர்வுப் பிரிவின் செயற்பாடுகளை வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ஒழுக்காற்றுப் பிரிவு**

i. நினைவூட்டல் கடிதங்களை அனுப்பும் போது ஏற்புடைய பதில்களை அனுப்புவதற்கு குறிப்பிட்ட காலப்பகுதியை நிர்ணயித்தல்.

ii. நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையில் தொடுக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பில் தகவல் தளமொன்றைப் பேணிவரல்.

**மேன்முறையீட்டுப் பிரிவு**

i. மேன்முறையீட்டுப் பிரிவுக்கு கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகளுக்கு அமைய அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அவதானிப்புரைகள் / சிபாரிசுகள் மற்றும் அறிக்கைகளை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு நினைவூட்டல் கடிதங்களை அனுப்புதல் மற்றும் அதனூடாக அமைச்சுச் செயலாளர்களை அறிவூட்டுதல்.

**07. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடனான கூட்டங்கள்**

| தொ இல | திகதி | விடயம் | பங்குபற்றிய அமைச்சு / திணைக்களம்/நிறுவனம் |
|---|---|---|---|
| 01 | 2018.04.02 | இலங்கை நிர்வாக சேவை தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வினாப்பத்திரங்களின் கட்டமைப்பை மாற்றுதல் | அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.<br>பரீட்சைத் திணைக்களம்<br>இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகம் |
| 02 | 2018.04.02 | இலங்கை விஞ்ஞான சேவையின் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (வளிமண்டலவியல் திணைக்களம்) பதவிக்கு நியமித்தல். | அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு. |
| 03 | 2018.04.03 | இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய அனுபவம் உள்ள இளைஞர் யுவதிகளை ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்த்தல் | கல்வி அமைச்சு |
| 04 | 2018.04.04 | நூதனசாலை திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு | நூதனசாலை திணைக்களம் |
| 05 | 2018.04.10 | SC(FR) 412/2017 திரு. டபிள்யு.டபிள்யு.ராஜபக்ஷ சமூக நலன்புரி அத்தியட்சகர் பதவிக்கு நியமித்தல் | சமூக வலுவூட்டல் அமைச்சு |
| 06 | 2018.04.20 | இலங்கை இறைவரிச் சேவை தரம் 1 ஆணையாளர் பதவிக்கு நியமித்தல் | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு |
| 07 | 2018.04.23 | இலங்கை தொழில்நுட்ப சேவை பதவி உயர்வுகள் | இலங்கை கடற்படை தலைமையகம் |
| 08 | 2018.04.24 | இலங்கை வெளிநாட்டுச் சேவை விசேட தரத்திற்கு பதவி உயர்வு | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு |
| 09 | 2018.05.02 | நிறைவேற்றுத்தர சேவை வகுதி III தபால் அத்தியட்சகர் பதவிக்கு நியமித்தல் - 2016 | அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| 10 | 2018.05.08 | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்புச் செய்தல் 2016/2017 (திறந்த) | நிதி அமைச்சு |
| 11 | 2018.05.08 | அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் தரம் III உத்தியோகத்தர்களை தரம் II க்கு | உள்நாட்டலுவல்கள் அமைச்சு |
| 12 | 2018.05.15 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் விசேட தர பதவிகளை நிரப்புதல் | அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு. |
| 13 | 2018.05.21 | இலங்கை தொழில்நுட்ப சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் பதவிக்கு (வெளிக்கள போதனாசிரியர்) ஆட்சேர்த்தல் | காணி ஆணையாளர் திணைக்களம் |
| 14 | 2018.05.22 | புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதில் உள்ள பிரச்சினைகள் | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு<br>புகையிரத திணைக்களம் |
| 15 | 2018.05.25 | புகையிரத எழுதுநர் அதி உயர் தரத்திற்கு பதவி உயர்வு வழங்குதல் பற்றிய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுதல் | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு |
| 16 | 2018.05.31 | பிரதி மருத்துவ நிர்வாக தரத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் இடமாற்றம் | அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம் |
| 17 | 2018.06.08 | இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் 1 உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு பதவி உயர்த்தல் | கமநல அபிவிருத்தி திணைக்களம் |
| 18 | 2018.06.11 | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் தரம் II க்கு உள்ளீர்ப்பு | அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு. |
| 19 | 2018.06.11 | துணை மற்றும் இடைநிலை மருத்துவ சேவைகளுக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டங்களை திருத்துதல் மற்றும் தகைமைகளை பூரணப்படுத்தாத உத்தியோகத்தர்களின் சேவையை உறுதிப்படுத்தல் | சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு |
| 20 | 2018.06.12 | அரசியல் பழிவாங்கல்கள் | கல்வி அமைச்சு |
| 21 | 2018.06.13 | இலங்கை வெளிநாட்டுச் சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்வு செய்தல் | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு |
| 22 | 2018.06.18 | இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு | அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு. |
| 23 | 2018.06.25 | பணிப்பாளர் (காணி உபயோகம்) இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் 1 வெற்றிடங்களை நிரப்புதல் | அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு. |
| 24 | 2018.06.25 | அளவீட்டுப் பிரிவு மற்றும் தரச் சேவை திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களை பதவி உயர்த்தல் | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு |
| 25 | 2018.06.26 | அகில இலங்கை சேவைகள் தெடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொது முறையொன்றை தயாரித்தல் | அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.<br>கல்வி அமைச்சு<br>கமத்தொழில் அமைச்சு<br>மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அமைச்சு<br>தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழு<br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்<br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் |

**08. பொதுமனுக்குழுவில் ஆஜராகுதல்**

2018.04.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரை ஆஜராகிய பொதுமனுக்குழு விசாரணைகளின் எண்ணிக்கை 03 ஆகும்.

--------------------------------//-----------------------------